புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

# ஏலாதியில் தமிழ்ப் பண்பாடு

முனைவர். ஐ.மோ. ஜெஸ்லின் நிமா,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, மகளிர் கிறித்தவக் கல்லூரி,
நாகர்கோவில் -1,

ஆய்வுச்சுருக்கம்

தமிழகத்தின் இருண்ட காலமான சங்கம் மருவிய காலத்தில் தோற்றம் பெற்ற பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான ஏலாதி என்னும் அறநூலில் கூறப்பட்டுள்ள பண்பாட்டு சிந்தனைகளைக் காதல், வீரம், ஒழுக்கம், விருந்தோம்பல், ஈகை, கொடை, கற்பொழுக்கம், நட்பு, ஒருமைப்பாடு என பகுத்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## முன்னுரை

சங்க காலத் தமிழர்கள் தம் வாழ்வை அகம், புறம் என்று பகுத்து தமக்கென சிறந்த தொரு பண்பாட்டை வகுத்திருந்தனர். 'பண்பாடு' என்பதற்கு "மக்களின் சிந்தனை வெளிப்பாடு" என்று பொருள் தருகிறது க்ரியா தமிழகராதி. பண்டைத் தமிழரின் உயரிய வாழ்வை தமிழ் இலக்கியங்களும், இலக்கணங்களும் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. இத்தகைய உயரிய தமிழர் பண்பாட்டிற்கு சங்ககாலத்தைத் தொடர்ந்த 400 ஆண்டு காலம் அரசியல், சமூக, சமய மாற்றங்களால் பாதிப்பு ஏற்பட்ட போது தமிழர் வாழ்வை நெறிப்படுத்தும் வகையில் தோற்றம் பெற்றதே நீதி இலக்கியங்கள் ஆகும். நீதி இலக்கியங்களில் கணிமேதாவியார் இயற்றிய ஏலாதி என்னும் நூலில் கூறப்பட்டுள்ள பண்பாட்டு சிந்தனைகளை இக்கட்டுரை ஆராய்கின்றது.

## காதல்

இல்வாழ்க்கை சிறப்புற அமைய இன்றியமையாதது தலைவன் தலைவியிடையேயான ஒத்த அன்பு. சங்க காலத்தில் தலைவன் தலைவியிடையிலான அன்பு செம்புலப்பெயல்நீர் போலவும், நிலத்தை விட பெரிதாகவும், வானைவிட உயர்வானதாகவும், கடலைவிட ஆழமானதாகவும் காணப்பட்டுள்ளது. இத்தகைய காதல் வாழ்க்கை தத்தம் நிலைக்கு ஏற்ப ஒழுகும் சான்றோர்க்கு அமையும் (29) என்று ஏலாதியில் கூறப்பட்டுள்ளது.

குடிக்கும் நீர் வளத்தையும், குளத்தையும், கிணற்றையும், வழியில் செல்பவர் தங்குவதற்குரிய சூழல்களையும், தண்ணீர்ப் பந்தலையும், மண்டபங்களையும் வகைவகையாக அமைப்பித்தவன் மிக்க செல்வம் உடையவனாகவும், உள்ளன்பு மிக்க பெண்ணின் ஊடலையும் கூடலையும் மிகவும் உடையவனாய் விளங்குவான் என்பதனை,

> "உண்ணீர் வளம்குளம் கூவல் வழிப்புரை
> தண்ணீரை அம்பலம் தான் பாற்படுத்தான் – பண்நீர
> பாடலோடு ஆடல் பயின்றுயர் செல்வனாய்க்
> கூடலொடு ஊடலுளான் கூர்ந்து" (51)

என்னும் பாடல் இயம்புகின்றது.

வீரம்

தமிழர்களுக்கு இரு கண்கள் போன்றவை காதலும் வீரமும் ஆகும். ஏலாதியில், தூதுவர்களுக்கு புகழைத் தருவது பகைவர்களுக்கு அஞ்சாமை (26) என்றும், தொன்மையுடைய குடியில் பிறந்து திருநான்மறை நெறியிலொழுகுபவர்களின் இலக்கணம் கூறுகையில்,

"சென்ற புகழ்செல்வ மீக்கூற்றஞ் சேவகம்
நின்ற நிலைகல்வி வள்ளன்மை" (1)

என்னும் பாடலடிகளில் வீரத்தில் அசையாது நின்ற நிலையும் கூறப்பட்டுள்ளது. பகைவனது வாள்படைக்கு அஞ்சாத வீரமுடையவனும் வீடுபேறு அடைய அறிவுநூல் ஒழுக்கங்களை அடைய வேண்டும் (22) என்று வீரம் என்னும் தமிழர் பண்பாடு உடல் சார்ந்தது மட்டுமல்ல உள்ளம் சார்ந்ததாக ஆகும் போது தான் நிலைபேறு அடைய முடியும் என சுட்டிக்காட்டுகின்றது ஏலாதி.

ஒழுக்கம்

தமிழர்கள் ஒழுக்கத்தை உயிரைவிட மேலானதாகப் போற்றியுள்ளனர். "ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்கிறார் வள்ளுவர். இல்லற ஒழுக்கத்தினின்று தவறாதவன் பகைவரை வென்று அரசாளுவான் (45) என ஏலாதி கூறுகின்றது.

"கொலைபுரியான் கொல்லான் புலான்மயங்கான் கூர்ந்த
அலைபுரியான் வஞ்சியான் யாதும்"

என்னும் பாடலடியில் பொய்யொழுக்கமில்லாதவனும் எந்த காரணத்தினாலும் தன்னிலைமையினின்று விலகாதவனும் பூவுலகத்தவருக்கும் வானுலகத்தவருக்கும் வணக்கத்துக்கு உரியவன் என்றும், பிறர் துன்பம் நீக்குதல், மற்றவரை இகழாமை, கீழ்மக்களுடன் பழகாமை, அனைவருக்கும் பசித்துன்பம் போக்குதல், உலகம் பழிக்கும் தீய ஒழுக்கத்தினின்று நீங்குதல், பழகுபவர் விரும்பும் சொற்களைப் பேசுதல் முதலிய ஒழுக்கங்களையுடையவன் கற்றவர்க்கு ஒப்பானவன் (4) என்றும் ஒழுக்கத்தினால் வரும் சிறப்பு ஏலாதியில் கூறப்பட்டுள்ளது.

விருந்தோம்புதல்

தமிழர்களின் தலைசிறந்த பண்பாடுகளுள் ஒன்று விருந்தோம்புதல் ஆகும். ஏலாதியில் விருந்தோம்பும் முறையும், விருந்தோம்புதலுக்கு உரியோரையும், விருந்தோம்புதலினால் அடையும் நன்மைகளும் கூறப்பட்டுள்ளன. விருந்தினருக்கு இன்சொல், மனம் கலந்த அன்பு, தங்கும் இடம், ஆடை, உணவு, மென்சொல் என்பவற்றை வழங்கினால் அவனை தேவரும் விருந்தினராக ஏற்றுக்கொண்டு உபசரிப்பர் (7) என்றும், விருந்தோம்புதலுக்கு உரியவரை,

"துறந்தார் துறவாதார் துப்பிலார் தோன்றாது
இறந்தார் ஈடற்றார் இளையர் –சிறந்தவர்க்கும்" (35) என்னும் பாடலடிகள்

விளக்குகின்றன. விருந்தினர் வரும் வழியைத் திருத்தித் தூய உணவைப் பகுத்துக் கொடுத்து உண்பவன் மன்ன னாகி பெருமையும் புகழும் அடைவான் என்பதனை,

"வையான் வழிசீத்து வால்அடிசில் –நையாதே
ஈத்துண்பான் ஆகும் இருங் கடல்சூழ் மன்னரசாய்ப்
பாத்துண்பான் ஏத்துண்பான் பாடு" (44)

என்னும் பாடலடிகள் சுட்டிக்காட்டுகின்றது. குற்றமற்ற உணவை விருந்தினருக்கு அளிப்பவன் பகைவரை வெற்றிகண்டு அரசாளுவான் (45) என்றும், விருந்தினர்களுக்குப் பொருளை மறைத்து வைக்காதவன் குற்றம் இல்லாத நாட்டைப் பெறுவதோடு குடும்பம் பெருகி வாழ்வான் (46) என்றும், தீய சொற்களைப் பேசாமலும், விருந்தினர்க்கும் பொருளை ஒளிக்காமலும், தன் வீட்டில் உணவு இடுவதற்குரிய இனிய சொற்களைப் பசித்தவர்களுக்குக் கூறி அழைத்து அவர்களுக்கு அளித்துத் தானும் உண்பானாயின் நிலையான அரசனாய் வாழ்வான் என்றும் ஏலாதியில் கூறப்பட்டுள்ளது. இதனை,

"வேற்றரவம் சேரான் விருந்தொளியான் தன் இல்லுள்
சோற்றரவம் சொல்லி உண்பானாயின்" (48)

என்னும் பாடலடிகள் புலப்படுத்துகின்றன.

ஈகை

வறியவருக்கு ஒன்றைக் கொடுத்து உதவுவது ஈகை ஆகும். “உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே” (புறம்) என்றும் “செல்வத்துப் பயனே ஈதல்” (புறம்) என்றும் ஈகைப்பண்பு தமிழர் பண்பாடுகளுள் முதன்மையானதாகச் சிறந்த அறமாகப் போற்றப்படுகின்றது. ஏலாதியில் அதிகமாகக் கூறப்படும் கருத்து ஈகை ஆகும். ஈகையாகக் கொடுக்கப்பட வேண்டியவை, ஈகையளிக்க வேண்டியவர்கள், ஈகையினால் கிடைக்கும் பலன்கள் என ஈகை என்னும் பண்பு கூறப்பட்டுள்ளது.

பிறருக்கு உணவு, நற்சொற்கள், பாதுகாப்பு வழங்க வேண்டும் என்பதனை,

“துறந்தார்கண் துன்னித் துறவார்க்கு இடுதல்
இறந்தார்க் கினிய இசைத்தல் – இறந்தார்
மறுதலை சுற்றம் மதித்தோம்பு வானேல்
இறுதலில் வாழ்வே யினிது” (16)

என்னும் பாடல் விளக்குகின்றது.

உணவு வழங்கப்பட வேண்டியவர்களை

“காலில்லார் கண்ணில்லார் நாவில்லார் யாரையும்
பாலில்லார் பற்றிய நூலில்லார் ”(36) என்னும் பாடலடிகளும்,
“இல்லிழந்தார் கண்ணிழந்தார் ஈண்டிய செல்வம் இழந்தார்
நெல்லிழந்தார் ஆனிரை தான் இழந்தார்க்கு” (52)

என்னும் பாடலடிகளும் விளக்குகின்றன. மேலும் கடன்பட்டவர், காப்பவர் இல்லாதவர், பொருள் இல்லாதவர், கால் முடமானவர், முதியவர், ஆதரவு இல்லாதவர் என்பவர்களுக்கும் (53), குழந்தையைப் பெற்றவர்கள், கருவுற்றவர்கள், குழந்தைகள், அறிவு மயங்கியவர்கள், வாதநோயுற்றவர்கள் (55,56,57,71) என்பவர்களுக்கும் உணவு வழங்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

பிறருக்குக் கொடுக்கும் போது இகழ்ந்து பேசுதல் கூடாது என்ற கருத்தும் ஏலாதியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது “எளியாரை எள்ளான்” (46) என்று கூறப்பட்டுள்ளது. ஈகைப் பண்பால் அடையும் நன்மைகளாக பண்டிதராய் வாழ்வார் (9) தேவர் தலைவனாவான் (32), மாளிகையில் இருப்பான் (43), மண்ணாண்டு குடிவாழ்வான் (46) மன்னராய் (52) படையராய் வாழ்வார் (53) மாக்கடல் சூழ் நாவலம் தீவு ஆள்வார் (56) அரசராய் (57) மன்னராக (58, 80) என்னும் பயன்கள் கூறப்பட்டுள்ளன.

கொடை

கொடை என்பதற்குத் தியாகம் என்று பொருள் தருகிறது அகராதி. பிறர்வாழ்வு வளம்பெறக் கொடுப்பது கொடை ஆகும். ஏலாதியில், முற்பிறப்பில் மாணவர்களுக்கு உணவு, உடை, எழுத்தாணி, சுவடி கொடுத்து உதவினவர்கள். இப்பிறப்பில் தம் வரலாற்றை பிறர் எழுதும் அளவிற்கு சிறப்புற வாழ்வார்கள் (63) என்றும், தேவையில் இருப்பவர்களுக்கு உணவு, ஆடை என்பவற்றை சந்தேகம் இன்றி அவரவர் இயல்பையுணர்ந்து அளித்தவன், இம்மண்ணுலகையும், விண்ணுலகையும் ஆள்வான் (70) என்றும் கூறப்பட்டுள்ளது. கொடை வழங்குதலுக்கு உரியவர்களை,

“தாயிழந்த பிள்ளை தலையிழந்த பெண்டாட்டி
வாயிழந்த வாழ்வினார் வாணிகம் – போயிழந்தார்
கைத்தூண் பொருளிழந்தார் கண்ணிலார்க்கு ஈந்தார்
வைத்து வழங்கிவாழ் வார்” (78)

என்னும் பாடல் சுட்டிக் காட்டுகின்றது. மேலும், கொடைத்தன்மையுடையவன் பல்லுயிர்க்கும் தாய் போன்று புகழத்தக்கவன் (6) என்றும், தன் உடல் உறுப்பை அறுத்துத் தந்ததைப் போன்று கொடை செய்பவன் விண்ணுலகத்திலும் இல்லை (20) என்றும், கொடைத்தன்மை கூறப்பட்டுள்ளது.

கொடையாக வழங்குபவையை,

“யானை குதிரைபொன் கன்னியே ஆனிரையோடு
ஏனை ஒழிந்த இவையெல்லாம் – ஆன் நெய்யால்
எண்ணனாய் மாதவர்க்கு ஊன்ஈந்தான் வைசிர

வண்ணனாய் வாழ்வான் வகுத்து'' *(49)*

என்னும் பாடலிலும்,

''எள்ளே பருத்தியே எண்ணெய் உடுத்தாடை
வள்ளே துணியே இவற்றொடு – கொள்ளென
அன்புற்று அசனம் கொடுத்தான் துணையினோடு
இன்புற்று வாழ்வான் இயைந்து'' *(50)*

என்னும் பாடலிலும் கூறப்பட்டுள்ளது.

### கற்பொழுக்கம்

கற்பு என்பது ஆண்பெண் என இருபாலருக்கும் வேண்டப்பட வேண்டிய ஒழுக்கமாகும். தமிழர்கள் ஒருவனுக்கு ஒருத்தி என்னும் ஒழுக்க நெறியை வகுத்துள்ளனர். ஏலாதியில் சான்றோர் பழித்தற்குரிய ஒழுக்கத்தை நீக்குதல் வேண்டும் *(4)* என்றும், மன அடக்கமுடையவனும், நற்குணமுடையவனும் தாயின் அன்பு போலும் அன்பினை உடையவன் *(6)* என்றும், யாழிசை போன்ற மொழிகளையிசைக்கின்ற பெண்டிரை பின்பற்றாமை நல்லது *(15)* என்றும் கூறப்பட்டுள்ளது.

மங்கையர் இன்பத்தை விரும்பாதவன் அமைச்சனாவான் என்பதனை,

''நாற்றஞ் சுவைகேள்வி நல்லார் இனஞ்சேர்தல்
தேற்றானேல் தேறு மமைச்சு'' *(17)*

என்னும் பாடலடிகள் விளக்குகின்றன. பிறர்மனைவி மேல் தனக்குரிமை விரும்பாதவன் பெருந்தன்மையுடையவன் *(19)* என்றும், மகளிரின் மொழியை நம்பாமல், காம நுகர்ச்சியை நினைக்காதவன் தேவரைவிட உயர்ந்தவன் *(20)* என்றும், பிறர்மனையாளை விரும்பாதவன் உலகாள்வான் *(42)* என்றும் கற்பொழுக்கம் புலப்படுத்தப்பட்டுள்ளது.

### நட்பு

''முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்'' என்னும் நற்றிணைப் பாடலுக்கேற்ப தமிழர்கள் நட்பிற்கு சிறந்த சான்றுகளாக வாழ்ந்துள்ளனர். ஏலாதியில், நண்பனின் சிறந்த பண்புகள் நட்பு கொண்டவருக்கும் வாய்க்கும் *(8)* என்றும், நண்பர்களிடமும் உறவினர்களிடமும் காட்டும் அன்பில் உயர்வு தாழ்வு இருத்தல் கூடாது *(9)* என்றும், கண்போன்ற நண்பர்கள் தவறு செய்தாலும் கோபம் கொள்ளக் கூடாது *(15)* என்றும், உயர்ந்த நட்பு கொண்டவர்கள் தன் வறுமைத் துன்பத்தை தன் நண்பரிடத்திலும் கூறமாட்டான் என்றும் கூறப்பட்டுள்ளது. இதனை,

''பொய்யுரையான் வையான் புறங்கூறான் யாவரையும்
மெய்யுரையான் உள்ளனவும் விட்டுரையான்'' *(33)*

என்னும் பாடலடிகள் விளக்குகின்றன.

''உண்மையான அன்புடைய நண்பர்களின் இயல்புகளை,
சாதல் பொருள்கொடுத்தல் இன்சொல் புணர்வுவத்தல்
நோதல் பிரிவில் கவறலே – ஓதலின்
அன்புடையார் உள்ளன ஆறு குணமாக
மென்புடையார் வைத்தார் விரித்து'' *(68)*

என்னும் பாடல் தெளிவுபடுத்துகின்றது. நண்பரின் துன்பத்தைத் தன் துன்பமாக ஏற்கும் தன்மையை,

''சாக்காடு கேடுபகை துன்பம் இன்பமே
நாக்காடு நாட்டறை போக்குமென – நாக்காட்ட
நாட்டார்க்கு இயையின் தமக்கியைந்த கூறுஉடம்
பட்டார்வாய்ப் பட்டது பண்பு'' *(79)*

என்னும் பாடல் புலப்படுத்துகின்றது.

### ஒருமைப்பாடு

''யாதும் ஊரே யாவரும் கேளீர்'' என்னும் ஒருமைப்பாட்டுணர்வு தமிழர்களின் மேலான பண்பாடு. ஏலாதியில் சமய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் வகையில், ஆறுவகைப்பட்ட

சமயத்தவர் நூல்களையும் கற்று அறிந்து, ஞானம் பெற்று, குற்றமுடைய கருத்துக்களையும் மாறுபட்டவையான கருத்துக்களையும் நீக்கி குற்றம் இல்லாத சிறந்த ஒழுக்கம் உடையனவாய் நன்மைக்கு மாறான மறுப்புச் சொற்களைப் போக்குவதே ஆசாரியனின் கடமை என்று கூறப்பட்டுள்ளது. இதனை,

"அறுவர்தம் நூலும் அறிந்துணர்வு பற்றி
மறுவரவு மாறான நீக்கி – மறுவரவின்
மாசா ரியனா மறுதலைச் சொல் மாற்றுதலே
ஆசா ரியனது அமைவு" (75)

என்னும் பாடல் தெளிவுபடுத்துகின்றது.

முடிவுரை

தமிழ்ப் பண்பாட்டில் சிதைவு ஏற்பட்ட காலகட்டத்தில் தோன்றிய ஏலாதியில் 80 பாடல்களில் பெரும்பான்மையான பாடல்களில் தமிழ்ப்பண்பாட்டை வழுவாமல் காப்பதற்கான சிந்தனைகள் விதைக்கப்பட்டுள்ளன. அறம் கூற எழுந்த நூலாதலால் பண்பாட்டுக் கூறுகள் அறத்தின் வழி வெளிப்படுத்தப்பட்டுள்ளன. காலந்தோறும் பல மாற்றங்கள் நிகழ்ந்தாலும் தமிழ்ப்பண்பாட்டினின்று தவறாமல் வாழ்வது மனிதனுக்கு நிலையான வாழ்வை வாழச் செய்யும்.

பார்வை நூல்கள்


1. பதினெண் கீழ்க்கணக்கு – 3, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.
2. தமிழ் இலக்கிய வரலாறு, முனைவர் பெ. சுயம்பு, பாரதி பதிப்பகம், பதிப்பு : 13-ம் பதிப்பு : 2017, திசையன் விளை – 627 657.
3. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, மறுபதிப்பு : 2001, சென்னை – 600 035.
4. தமிழ்ப் பேரகராதி தொகுதி-II, சென்னைப் பல்கலைக் கழகம், 1982, சென்னை – 600 002.

ஏலாதி, திரு.தி.சு. பாலசுந்தரம் பிள்ளை (உரை), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, நவம்பர் – 1989.


********* ********* ********** ********* ********* ********** ********** **********